2012 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டுள்ள சின்னக்கவுண்டம்பட்டி தாய்க் கடையிலே 160 குடும்ப அட்டைகள் உள்ளன. 160 குடும்ப அட்டைகளுக்கு திங்கள், புதன் மற்றும் வெள்ளி ஆகிய மூன்று நாட்களில் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. அதேபோல, அண்ணாமலைப்பட்டி கிராமத்தில் இருக்கக்கூடிய, 406 குடும்ப அட்டைகளுடன் உள்ள முதல் பகுதிநேரக் கடை செவ்வாய், வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் செயல்பட்டு வருகிறது என்பதையும், இதைப்போலத்தான் தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற பகுதிநேரக் கடைகளில் எந்தெந்த நாட்களில் விநியோகம் செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்து, அதன் அடிப்படையிலேதான் பொருட்கள் வழங்கப்படுகின்றன என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

115—

தூர் வாருதல்

***5755—திரு. பி.எல். சுந்தரம்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகர் அணையைத் தூர் வார அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பவானிசாகர் அணையைத் தூர் வார அரசு நடவடிக்கை எடுக்குமா என்கிற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். பவானிசாகர் அணையின் முழுக் கொள்ளளவு 32.80 டி.எம்.சி. அடி ஆகும். இந்த அணை கட்டி முடிக்கப்பட்டு 56 வருடங்கள் ஆகின்றன. இந்த இடைவெளியில் அணையில் படிந்துள்ள சுமார் 3.15 டி.எம்.சி. அடி வண்டல் மண்ணை

அகற்றுவதற்குத் தோராயமாக ரூ.850 கோடி நிதி தேவைப்படுகிறது. மேலும், இந்த அளவு அதிகமாக உள்ள வண்டல் மண்ணைக் கொட்டுவதற்குப் போதுமான இடவசதி இல்லை. தற்பொழுது அணையில் படிந்துள்ள மண்ணினால் நீர்ப் பாசனத்திற்கு பெரிய அளவில் பாதிப்பு ஏதுமில்லை.

இருந்தபோதிலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாசனத்திற்குப் பாதிப்பு ஏற்படுகின்ற வகையிலே உள்ள அணைகளைத் தூர் வார வேண்டுமென்று உத்தரவிட்டதன் பயனாக, ஆய்வுப் பணிகள் பல்வேறு நிலையிலே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆய்வுப் பணிகளிலே முதற்கட்டமாக பாசனத்திற்கு பாதிப்பு ஏற்படுகின்ற அணைகளில் தூர் வார நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அடுத்தபடியாக மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அணையில் தூர் வார நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.

திரு. பி.எல். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் அணை 1955 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. இதன் கொள்ளளவு 32.8 டி.எம்.சி. அடி ஆகும். அங்கே தற்போது 17 அடி உயரத்திற்கு சேறும் சகதியுமாகத் தேங்கியுள்ளது. நீலகிரி மலைப் பகுதியில் அவ்வப்போது நிலச் சரிவு ஏற்படுவதால் ஒவ்வொரு முறையும் ஏராளமான மண்ணும், மரங்களும் அடித்துவரப்படுவதால், நாளுக்குநாள் அணையில் தேங்கும் சேற்றின் அளவு அதிகரித்துக்கொண்டே வருகிறது. தேங்கியுள்ள சேற்றை அகற்றினால் மூன்றிலிருந்து ஐந்து டி.எம்.சி. அடி வரை கூடுதலாகத் தண்ணீரைத் தேக்க முடியும் என்று தெரிகிறது. சேற்றைத் தண்ணீரோடு கலக்கி டிரெட்ஜிங் முறைப்படி தண்ணீரோடு வெளியேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது முதற்கட்டமாக, அம்மா

2012 ஏப்ரல் 18]

அவர்கள் ஆணையிட்டுள்ளதன்படி, நீர்ப் பாசனத்திற்கு பாதிப்பு ஏற்படுகின்ற அணைகளிலே தூர் வாருகின்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கூடிய விரைவிலே இந்த அணையிலும் தூர் வாரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 116, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

116—

கூட்டுறவுச் சங்கம்

6435*—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறையில் விசைத்தறி தொழில் கூட்டுறவுச் சங்கம் துவக்கி துணிகளை விற்பனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) பெருந்துறையில் விசைத்தறி தொழில் கூட்டுறவுச் சங்கம் துவக்கி துணிகளை விற்பனை செய்ய விசைத்தறி நெசவாளர்கள் முன்வந்தால் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு ஆவன செய்யும் என்பதை பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.*

முற்பகல் 10—55

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே விசைத்தறித் தொழிலுக்காக ஒரு ரூபாய்க்கு ஒரு யூனிட் மின்சாரம் வழங்கிய ஒரே முதலமைச்சர்*